# Novavax COVID-19 தடுப்பூசி: நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை

Vaccinate WA
CovidVaccineWA.org

## Novavax தடுப்பூசி என்பது என்ன?

Food and Drug Administration (FDA, உணவு மற்றும் மருந்து நிர்வாகம்) புதிதாக அங்கீ கரித்திருக்கும் COVID-19 தடுப்பூசியான Novavax, அமெரிக்காவில் தற்போது கிடைக்கும் பிற COVID-19 தடுப்பூசிகளிலிருந்து வேறுபட்டது. HPV, ஹெபடைடிஸ் B மற்றும் ஃப்ளூ போன்ற பிற தடுப்பூசிகளில் பரவலாகக் காணப்படும் அதே, நீண்ட காலமாக உபயோகிக்கப்படும் தொழில்நுட்பத்தை உபேயாகிக்கும் ஒரு புரதத் துணைஅலகு தடுப்பூசி Novavax ஆகும். 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு, 21 நாட்கள் இடைவெளியில் 2 டோஸ் தொடராக Novavax கொடுக்கப்படுகிறது.

## Novavax ஒரு பாரம்பரியமான புரதத் துணைஅலகு தடுப்பூசியாகும்.

COVID-19 வைரஸை நமது உடலின் நோயெதிர்ப்பு மண்டலம் கண்டுகொண்டு, தாக்குவதற்கு அங்கீ கரிக்கப்பட்ட ஒவ்வொரு தடுப்பூசியும் உதவினாலும், Novavax ஒரு பழமையான மிகவும் அறியப்பட்ட தடுப்பூசி தொழில்நுட்பத்தை உபயோகிக்கிறது.



- புரதத் துணைஅலகு COVID-19 தடுப்பூசிகள் COVID-19 ஏற்படுத்தும் வைரஸின் துகள்களைக் (புரதங்களைக்) கொண்டிருக்கும்
- கொழுப்புசத்து மற்றும் சர்க்கரைகளுடன், வைரஸுக்குப் பதில் வினைபுரிந்து உங்களை எதிர்காலத்தில் பாதுகாக்க நோயெதிர்ப்பு மண்டலத்திற்கு உதவும் ஒரு கூடுதல் சேர்க்கையையும் இவை கொண்டிருக்கும்
- இவற்றில் mRNA இருக்காது

## Novavax இன் மூலம் ஏற்படும் பின்விளைவுகள் குறைவாக உள்ளதாக நிரூபிக்கப்படுகிறது.

Novavax இன் தற்காலிக பின் விளைவுகள் பிற COVID-19 தடுப்பூசிகளில் காணப்படுவதைத் தவிர வேறில்லை. வலி/நொய்வு, ஊசியிட்ட இடத்தில் சிவத்தல் மற்றும் வீக்கம், மேலும் சோர்வு, தசை வலி, தலைவலி, மூட்டுவலி, குமட்டல்/வாந்தி மற்றும் காய்ச்சல். புரதத் துணைஅலகு COVID-19 தடுப்பூசிகள் COVID-19 அல்லது பிற நோய்களை ஏற்படுத்தாது.

## தரவு எதைக் காட்டுகிறது?

ஸ்ப்ரிங் 2021 இல் நடத்தப்பட்ட மருத்துவ ஆய்வில் Novavax தடுப்பூசியானது COVID-19 நோய்த்தொற்றை நிறுத்துவதில் 90% ஆற்றலையும், COVID-19 சார்ந்த இறப்புகளைத் தடுப்பதில் 100% ஆற்றலையும் காட்டியுள்ளது.

நடந்துகொண்டிருக்கும் ஆய்வுகளின் அடிப்படையில், BA.5 உட்பட அனைத்து COVID-19 திரிபுகளுக்கு எதிராகவும் பரவலான நோயெதிர்ப்பு பலனை இந்தத் தடுப்பூசி தூண்டியதாகச் சொல்லப்படுகிறது. Novavax போன்ற துணைஅலகு தடுப்பூசிகள் எந்த உயிருள்ள வைரஸையும் உபயோகிக்காது மற்றும் நமது மரபணுக்களை மாற்றவோ அல்லது பாதிக்கவோ செய்யாது. Novavax குறித்து கீழ்கண்டவற்றை அறிந்துள்ளோம்:



- கனடா உட்பட வேறு பல நாடுகளில் 2021 முதல் ஆற்றலுடன் உபயோகிக்கப்பட்டு வருகிறது
- பிற தடுப்பூசிகளில் உபயோகிக்கப்படும் ஒவ்வாமையைத் தூண்டும் பொருட்கள் எவையும் இதில் இல்லை
- ஃப்ளூ, HPV, ஹெபடைடிஸ் B மற்றும் அக்கி போன்ற பிரபலமான தடுப்பூசிகளில் உபயோகிக்கப்படும் அதே தெரிந்த தொழில்நுட்பத்தை உபயோகிக்கிறது

FDA இன் Emergency Use Authorization (EUA, அவசரகால உபயோக அங்கீ காரம்) செயல்முறையில் Novavax தேர்ச்சி பெற்றுள்ளது, மேலும் mRNA தடுப்பூசிகளுக்கு மாற்று தேடுபவர்களுக்கு இது ஒரு நல்ல விருப்பத்தேர்வாகும்.

எதிர்காலத்தில் பிற சூழக்களுக்கான கூடுதல் டோஸ்கள் பரிந்தரைக்கப்படலாம்.

## தற்போதும் தடுப்பூசி செலுத்திக் கொள்வதே சிறந்த தேர்வாகும்.

தற்போதும் COVID-19 இருப்பதால், தடுப்பூசிக்கான விருப்பத்தேர்வுகள் அதிகமாக கிடைக்கின்றன. தடுப்பூசி செலுத்திக்கொள்வதே சிறந்தது என்பதை நினைவில் கொள்வது முக்கியமாகும். தடுப்பூசியின் நிறுவனப்பெயரைப் பொருட்படுத்தாமல், COVID-19 மற்றும் அதன் பாதிப்பில் இருந்து தடுப்பூசி பெற்றுக்கொள்வதே சிறந்த பாதுகாப்பைத் தரும். உங்களுக்கு எந்தத் தேர்வு சிறந்தது என்பது குறித்து உங்கள் வழங்குநரிடம் கலந்துரையாடுங்கள்.

Washington State Department of Health

DOH 825-052 August 2022 Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.